**மாவட்டஉரிமையியல் நீதிமன்றம்,ஸ்ரீவைகுண்டம்.**

**அசல் வழக்கு எண்.66/2024**

செய்யது அலி பாத்திமா ... வாதி

/எதிர்/

அப்துல்காதர் ... பிரதிவாதி

**<u>வாதி தாக்கல் செய்யும் வழக்கு பெருமான விபரப் பட்டியல்</u>**

| | | | |
|---|---|---|---|
| 1 | வாதி கோருகிற பரிகாரம் | : | குலா எனும் திருமண முறிவை வழங்கியது சட்டப்படியானது என விளம்புகை செய்யக் கோரி |
| 2 | வாதி செலுத்தும் நீதிமன்றக் கட்டணம் சட்டப் பிரிவு | : | 25(d)TNCF Act |
| 3 | வழக்கின் மதிப்பு | : | ரூ.5,000/- |
| 4 | வாதி செலுத்தும் நீதிமன்றக் கட்டணம் | : | ரூ.150/- |

//உத்தரவுப்படி//

தலைமை எழுத்தர்,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
ஸ்ரீவைகுண்டம்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்.
முன்னிலை: திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன், M.A., M.Phil., L.L.M.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்.
திருவள்ளுவராண்டு 2057–ம் வருடம் பங்குனித் திங்கள் 09 ம் நாள் திங்கட்கிழமை
2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் நாள் திங்கட்கிழமை
அசல் வழக்கு எண்.66/2024
**CNR.No. TNTT-08-000072-2024**

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், செய்துங்கநல்லூர், முஸ்லீம் புதுத்தெரு, கதவு எண்.477 என்ற முகவரியில் வசித்து வரும் அபுசாலி முகைதீன் அவர்கள் மகள், முஸ்லீம் 38 வயதுள்ள செய்யது அலி பாத்திமா ... வாதி

....எதிர்...

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, சாந்திநகர், 28 வது –5 வது குறுக்கு தெரு, கதவு எண்.4/845 என்ற முகவரியில் வசிக்கும் பசீர் அவர்கள் மகன், முஸ்லீம் சுமார் 43 வயதுள்ள ப.அப்துல்காதர் ... பிரதிவாதி

28.12.2011 ல் வாதிக்கும், பிரதிவாதிக்கும் நடைபெற்ற திருமண உறவை ரத்து செய்து முஸ்லீம் முறைப்படி குலா என்னும் திருமண முறிவை 11.09.2023 ல் வழங்கியது சட்டப்படியானது என விளம்புகை செய்யக் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| தாவா வழக்கு தாக்கலான நாள் | : | 24.04.2024, 01.07.2024, 02.07.2024 |
| தாவா கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 04.07.2024 |
| வழக்கு மூலம் | : | 28.12.2011, 01.10.2012, 2013, 2014, 2021 நவம்பர், 23.02.2023, 08.04.2023, 22.07.2023, 11.09.2023, 13.09.2023, 25.09.2023 ஆகிய தேதிகளில் செய்துங்கநல்லூரில் உற்பத்தி. |

-

## வழக்கு பெருமானம்

| | | |
|---|---|---|
| வாதி கோரும் குலா எனும் திருமண முறிவை வழங்கியது சட்டப்படியானது என விளம்புகை செய்யக் கோரிய பரிகாரம் பொறுத்து வழக்கு பெருமானம் | : | ரூ.5,000/- |
| அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணச் சட்டம் பிரிவு 25(d)ன்படி செலுத்தப்பட்டுள்ள முத்திரைக் கட்டணம் | : | ரூ.150/- |

இவ்வழக்கில் வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.தெ.வெங்கடாசலபதி அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தோன்றாத்தரப்பினர் ஆகியுள்ள நிலையிலும், இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று (23.03.2026) இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்....

## தீர்ப்பாணை

வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட்டு வாதிக்கும், பிரதிவாதிக்கும் 28.12.2011 ல் நடைபெற்ற திருமணத்தின்படியான உறவினை ரத்து செய்து முஸ்லீம் முறைப்படி 11.09.2023 ம் தேதி வழங்கிய குலா சட்டப்படியானது என விளம்புகை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

(இருதரப்பிலும் செலவுத் தொகைப் பட்டியல் தாக்கல் இல்லை)

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 23 ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.03 12:14:26 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
ஸ்ரீவைகுண்டம்.
தீர்ப்பாணை
அசல் வழக்கு எண்.66/2024
நாள்.06.03.2026